

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 19.06.2026

# அவர் முதல்வர் அல்ல!

ஐந்தாண்டு காலத்தில் அரைகோடி மாணவ, மாணவியரை அனைத்துத் துறையிலும் தகுதி படைத்தவர்களாக உயர்த்திய மாபெரும் திட்டம் தான் - மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது ஆட்சி காலத்தில் உருவாக்கிய 'நான் முதல்வன்' திட்டம் ஆகும். அவரது கனவுத் திட்டம் அது. அத்தகைய மகத்தான திட்டத்தின் பெயரை 'TN SKILL CORPORATION' என பெயர் மாற்றி இருக்கிறது தற்குறி அரசு.

இதுவரை 'தற்குறிகள்' என்று சொல்வதற்கான முழுமையான பொருத்தத்தை இப்போது தான் அடைகிறார்கள்!

**'நான் முதல்வன்' என்று சொல்லிப் பாருங்கள். 'TN SKILL CORPORATION' என்று சொல்லிப் பாருங்கள். எந்தச் சொல் உற்சாகத்தையும், தன்னம்பிக்கையையும் விடாமுயற்சியையும், வெற்றிக்கான உணர்ச்சியையும் கொடுக்கும்? 'நான் முதல்வன்' என்ற சொல்லை உச்சரிப்பவர் எவராக இருந்தாலும் அவர்கள் அனைவருமே தங்களது துறையில் 'நான் முதல்வன்' என்ற உணர்ச்சியையும், உந்துதலையும் பெறுவார்கள். அதனால் தான் அந்தப் பெயரைச் சூட்டினார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

என்னரும் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பண்ணரும் கலை ஞானத்தால்
பராக்கிரமத்தால் அன்பால்
உன்னத இமய மலை போல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?

- என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஏக்கத்துடன் பாடினார். அத்தகைய ஏக்கம் போக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட திட்டம் அது.

**"எனது தந்தை பேருந்து நடந்துநர். எனது அம்மா பீடி சுற்றும் தொழிலாளி. நான் இன்று ஐ.பி.எஸ். ஆகி இருக்கிறேன். நான்கு ஆண்டுகளுக்கு முன் இதே போன்ற ஒரு மேடையில் உங்களைப் போன்று கூட்டத்தோடு கூட்டமாக பின்புறம் உட்கார்ந்து இருந்தேன். இன்று ஐ.பி.எஸ். ஆகிவிட்டேன். அரசின் திட்டத்தால் தான் இது சாத்தியம். என்னைப் போல நீங்களும் ஆகலாம்" என்று ஐ.பி.எஸ். ஆன மாணவி ஒருவர் பேசினார். இதுதான் 'நான் முதல்வன்' திட்டத்தின் மகத்தான வெற்றி ஆகும்.**

'நான் முதல்வன்' திட்டத்தால் பலன் பெற்று ஐ.ஏ.எஸ்.ஆன அதிகாரி ஆன ஒரு மாணவன், "எனக்கு 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலமாக கிடைத்த ரூ.1.15 லட்சம் தான் பெரும் உதவியாக இருந்தது. அதனை வைத்துத்தான் படித்தேன்." என்றார். இதுதான் 'நான் முதல்வன்' திட்டத்தின் மாபெரும் வெற்றி ஆகும்.

'நான் மட்டும் முதல்வர் அல்ல, நீங்கள் அனைவரும் முதல்வன் தான்' என்று சொல்லி இத்திட்டத்துக்கு, 'நான் முதல்வன்' திட்டம் என்று பெயர் சூட்டினார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். ஐந்தாண்டு காலத்தில் 50 லட்சம் இளைஞர்கள் இதற்கான பயிற்சியைப் பெற்று நல்லபல பணிகளில் சேர்ந்துள்ளார்கள்.

'நிறுவனங்களை உருவாக்கத் தயாராக இருக்கிறோம். அதற்குத் தகுதி வாய்ந்த திறமைசாலிகளை உருவாக்கிக் கொடுங்கள்' என்று பல்வேறு நிறுவனங்கள் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களிடம் சொல்லி, அதற்காக அவர் உருவாக்கிய திட்டம் தான் 'நான் முதல்வன்'. 'நமக்கெல்லாம் பெரிய கம்பெனியில் வேலை கிடைக்குமா?' என்று ஏங்கிய இளைஞர்களுக்கு தன்னம்பிக்கையை விதைத்த திட்டம் அது.

**அந்த திட்டத்தின் நோக்கத்தையே சிதைக்கும் வகையில் 'TN SKILL CORPORATION' என்று பெயர் சூட்டி இருக்கிறார் முதலமைச்சர் விஜய். சிலருக்கு தானும் செய்யத் தெரியாது. அடுத்தவர் செய்ததையும் கெடுப்பார்கள். அத்தகைய ரகம் விஜய். ஒரு நல்ல திட்டத்தின் நோக்கத்தைச் சிதைத்து, அதனை ஒரு பயிற்சியைப் போல சிதைத்து விட்டார் விஜய். அவரிடம் இருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?**

**'நான் முதல்வன்' திட்டத்தின் அதிகாரப்பூர்வ தளத்தில் 'TN SKILL CORPORATION' என்று பெயரை மாற்றிய முதலமைச்சர் விஜய், அத்திட்டம் தொடர்பான அனைத்து பழைய பதிவுகளையும் நீக்கி இருக்கிறார்கள். வீடியோ பதிவுகளை நீக்கி இருக்கிறார்கள். மே 15 ஆம் தேதியில் இருந்தே பதிவுகள் இருப்பதாக செய்திகள் வெளியாகி இருக்கிறது.**

பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டு விடாது. 'நான் முதல்வன்' என்ற சொல்லை அகராதியில் இருந்து இந்த ஆணவம் பிடித்தவர்களால் நீக்க முடியாது. இத்திட்டத்தால் பலன் பெற்றவர்களின் அறிவுத் திறனை செயலற்றதாக ஆக்க முடியாது. 'நான் முதல்வன்' திட்டத்தால் பணி பெற்றவர்களின் பணியை பறிக்க முடியாது. 'நான் முதல்வன்' திட்டத்தால் தன்னம்பிக்கையையும் துணிச்சலையும் பெற்றவர்களின் துணிச்சலைப் போக்க முடியாது.

**பெயரை நீக்குவதால் பெரிய ஆளாக ஆகிவிட முடியாது விஜய். 'நான் முதல்வன்' என்று சொல்லும் போதே 'மு.க.ஸ்டாலின்' பெயர் தான் விஜய்க்கு நினைவுக்கு வருகிறது என்றால் இத்திட்டத்தின் அடித்தளம், விதை அவர் போட்டது ஆகும். எத்தனையோ திட்டங்கள் வரும். போகும். ஆனால் மக்கள் மனதில் நின்றவை சில தான். அத்தகைய திட்டங்களில் ஒன்று 'நான் முதல்வன்' ஆகும்.**

2021 ஆம் ஆண்டுக்கான குடிமைப் பணி தேர்வு முடிவுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 27 மாணவர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டனர். 'நான் முதல்வன்' திட்ட பயிற்சிகளின் மூலமாக கடந்த ஆண்டு 57 பேர் தேர்வு ஆனார்கள். அது 'நான் முதல்வன்' திட்டத்தின் மகத்தான சாதனை ஆகும். இது போன்ற ஒரு திட்டத்தை சிந்திக்கத் தெரியாமல் சிதைக்கும் வகையில் பெயரை மாற்றி இருக்கிறார் விஜய்.

**பிரதமர் மோடிக்கு கொடுத்த கடிதத்தில், "ஆண்டுதோறும் ஐந்து இலட்சம் இளைஞர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய பணியிடைப் பயிற்சிகள் (Internships) மற்றும் தொழில் துறையுடன் இணைந்த திறன் பயிற்சிகளை வழங்கும் "இளைஞர் திறன் மற்றும் வேலைவாய்ப்பு இயக்கத்தை" (Youth Skill and Employment Mission) செயல்படுத்த விழைகிறேன்" என்று சொல்லி இருக்கிறார் விஜய். இதுதான் 'நான் முதல்வன்' திட்டம் ஆகும். அதாவது 'நான் முதல்வன்' என்ற ஸ்டிக்கரை கிழித்து விட்டு புது ஸ்டிக்கர் ஒட்டி இருக்கிறார் விஜய். தன்னால் புதிதாக எதுவும் கிழிக்க முடியாது என்று விஜய்க்குத் தெரியும்.**

**'TN SKILL CORPORATION' என்று மாணவர்களிடம் சொன்னாலும், 'பழைய நான் முதல்வன் ஸ்கீம் தான்' என்று மாணவ, மாணவியர் சொல்வார்கள். அப்படி உச்சரிக்கப்படும் ஒவ்வொரு நொடியும் தமிழ்நாட்டை ஆள்வது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினே!**






கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நேற்று முன்தினம் (17.6.2026) மாலை 6.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

## தேர்தல் வாக்குறுதிகளைக் கைவிரித்திட விஜய் அரசு திட்டம்!

### நலத்திட்டங்களை நிறைவேற்றி – கழக ஆட்சியில் வாங்கிய கடனை விட

# குறைவான கடனை நீங்கள் வாங்கினால் நான் பொறுப்பிலிருந்து விலகத் தயார்!

## த.வெ.க. அரசுக்கு – முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு சவால்!

சென்னை, ஜூன்.19-

"வெள்ளை அறிக்கை அல்ல, அது வெற்று அறிக்கை!" வாக்குறுதிகளை நிறைவேற்ற மாட்டோம் என கைவிரிக்கவே இந்த வெள்ளை அறிக்கை தங்களின் இயலாமையை மூடி மறைக்கும் உத்தி என்றும் நலத்திட்டங்களை நிறைவேற்றி தி.மு.க. ஆட்சியில் வாங்கிய கடனை விட குறைவான கடன் நீங்கள் வாங்கினால் நான் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்கிறேன். இது சவால் என்றும் ஒன்றிய அரசால் கடந்த ஆண்டில் ரூ.41,411 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டது பற்றி கூறவில்லையே ஏன்.. அவ்வளவு பயமா..? என்றும் முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.



முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் (17.6.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அதன் விவரம் பின்வருமாறு:-

நேற்று (16.6.2026) இந்த அரசு வெளியிட்ட வெள்ளை அறிக்கை என்பது ஒரு வெற்று அறிக்கை தான். இதன் உண்மையான நோக்கம் என்பது, இந்த அரசு தன்னுடைய இயலாமையை மூடி மறைக்க கூடிய உத்தியாக இதை வெளியிட்டுள்ளது. மக்களிடம் அவர்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு வழி தெரியாமல் கையை விரித்து, தங்கள் இயலாமையை மூடி மறைத்து தப்பித்துக்கொள்ளும் விதமாக ஒரு எஸ்கேப்பிசமாக இந்த வெற்று அறிக்கையைப் பயன்படுத்தியுள்ளனர்.

வெள்ளை அறிக்கை வெளியிடுவது என்பது இது முதல் முறை அல்ல. ஏற்கனவே 2001, 2021 ஆம் ஆண்டுகளில் வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தற்போது வெளியிடப்பட்டுள்ள வெள்ளை அறிக்கை என்பது மூன்றாவது வெள்ளை அறிக்கை. இப்படி மூன்று முறை வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டிருந்தாலும் தற்போதைய வெள்ளை அறிக்கைக்கும் இதற்கு முன்பான வெள்ளை அறிக்கைக்கும் நிறைய வேறுபாடு உள்ளது.

### மறைப்பதற்கான காரணம் என்ன?

2001 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சராக இருந்த போது ஜெயலலிதா அவர்கள் வெளியிட்ட வெள்ளை அறிக்கை அதற்கு முன்பான 10 ஆண்டுகால நிதி நிலை அறிக்கையை கொண்டிருந்தது. அதற்குப் பிறகு கடந்த எங்களுடைய ஆட்சியில் 2021 ஆம் ஆண்டு வெளியிட்ட வெள்ளை அறிக்கையானது அதற்கு முந்தைய 15 ஆண்டுகால நிதிநிலை அறிக்கையை உள்ளடக்கி இருந்தது. ஆனால் தற்போது இவர்கள் வெளியிட்டுள்ள வெள்ளை அறிக்கையில் கடந்த ஐந்தாண்டின் நிதி நிலை அறிக்கை மட்டுமே உள்ளது. அதற்கு முன்பு இருந்த நிதி நிலை பற்றிய எந்த தகவல்களும் இடம்பெறவில்லை. தி.மு.க. ஆட்சியை மட்டும் குறிப்பிட்டு அதற்கு முன்பிருந்த அ.தி.மு.க. ஆட்சியின் நிதி நிலைமை பற்றி மறைப்பதற்கான காரணம் என்ன.? யாரைக் காப்பாற்றுவதற்காக இந்த வெள்ளை அறிக்கையில் அ.தி.மு.க. ஆட்சியின் நிதி நிலை அறிக்கை இடம்பெறவில்லை என்ற கேள்வி எழுகிறது. தீர்ந்து போன சக்தி என இவர்கள் குறிப்பிட்டார்களே அவர்களிடம் இருந்து இன்னும் யாரையாவது கவர்ந்து கொள்வதற்காக, இந்த வெள்ளை அறிக்கையில் அவர்கள் ஆட்சி நிதி நிலை பற்றி மறைக்கப்பட்டுள்ளதா? அதை மக்களின் பார்வைக்கே விட்டுவிடுகிறேன்.

இந்த வெள்ளை அறிக்கையின் நோக்கமே மக்களிடம் என்ன சொல்லி தப்பித்துக் கொள்வது என்பதாக உள்ளது. ஆழம் தெரியாமல் காலை விட்டு நிறைவேற்ற முடியாத தவறான வாக்குறுதிகளை வழங்கி மக்களை நம்ப வைத்தது ஆட்சிக்கு வந்துவிட்டதால் இதை வைத்து தப்பித்துக் கொள்ள நினைக்கிறார்கள்.

### பொய்யான வாக்குறுதிகள்!

நாங்கள் 2021 ஆம் ஆண்டில் வெள்ளை அறிக்கை வெளியிட்ட போதே இந்த வெள்ளை அறிக்கையை காரணம் காட்டி நாங்கள் தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இருப்பதற்காக அல்ல அதற்காக இதை வெளியிடவில்லை என்பதை தெளிவாக மக்களிடம் கூறினோம். ஆனால் இப்போது இவர்கள் வெளியிட்டுள்ள வெள்ளை அறிக்கையிலேயே நிதி நிலையை காரணம் காட்டி புதிய திட்டங்கள் தொடங்குவது சிரமம் என ஆரம்பத்திலேயே சொல்கிறார்கள். அப்படி என்றால் இவர்கள் நோக்கம் வெள்ளை அறிக்கையை காரணம் காட்டி தாங்கள் அளித்த பொய்யான வாக்குறுதிகளில் இருந்து தப்பித்துக் கொள்வது மட்டுமே. எடுத்த எடுப்பிலேயே தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது என கைவிரித்துவிட்டது இந்த அரசு. நிதி நிலை மோசமான சூழல் இருந்த போதும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிய எங்களின் முதலமைச்சர் எங்கே, நிதி நிலை கட்டுக்குள் இருந்தும் அதை காரணம் காட்டி வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது என சொல்லும் இவர் எங்கே!

வழக்கமாக நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யும் முன்பாக வெள்ளை அறிக்கை வெளியிடப்படும். ஆனால் நாளை ஆளுநர் உரையில் புதிய திட்டங்கள் பற்றி கூற வேண்டும் என்பதால் அதில் இருந்து தப்பித்துக் கொள்ள தற்போதே புதிய திட்டங்களை எதிர்பார்க்காதீர்கள் என மக்களிடம் சொல்லும் விதமாக வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அவர்கள் வெளியிட்டுள்ள வெள்ளை அறிக்கையில் கடந்த ஆட்சியில் கடன் இருமடங்காக அதிகரித்து விட்டது என்கிறார். பொதுவாக நிதி நிர்வாக தன்மையும் வரலாற்று ரீதியாக இந்த நிதிநிலைமை, கடன் எவ்வாறு உள்ளது என்பதையும் பார்க்க வேண்டும்.

### தி.மு.க. ஆட்சியில்தான் கடன் அளவு உயர்ந்ததா?

2006-2007 ஆம் ஆண்டு 57,457 கோடி ரூபாய் கடன் இருந்தது. அதே 2011-12 ஆம் ஆண்டுகளில் ரூ.1,01,350 கோடியாக இருமடங்காக உயர்ந்திருந்தது. 2016-17 ஆம் ஆண்டு ரூ.2,11,066 கோடியாக உயர்ந்தது. 2020-21 ஆம் ஆண்டில் ரூ.4,85,000 கோடி என 2.7 மடங்கு உயர்ந்திருந்தது. தற்போது ரூ.10 லட்சம் கோடி என உள்ளது. ஆகவே இது தொடர்ச்சியாக வர கூடிய ஒன்றுதான் ஆனால் ஏதோ தி.மு.க. ஆட்சியில் தான் கடன் அளவு இவ்வளவு அதிகரித்துள்ளது போல தவறாக குறிப்பிடுகிறார்கள். இந்த அரசுக்கு நான் சவால் விடுகிறேன். ஐந்தாண்டுகள் நீங்கள் ஆட்சி செய்தால் தமிழ்நாட்டின் கடன் ரூ.20 லட்சம் கோடியாக இருக்கும் என சவாலாக சொல்கிறேன். அதை யாராலும் தடுக்க முடியாது. இன்னொன்றையும் சொல்கிறேன் கடந்த எங்களது ஆட்சியின் திட்டங்களை தொடர்ந்து, நீங்கள் அளித்துள்ள வாக்குறுதிகளையும் நிறைவேற்றி, உங்களின் நிதி மேலாண்மையால் தி.மு.க. ஆட்சியில் நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் வாங்கிய சராசரி கடனை விட குறைவான கடனை வாங்கினால் நான் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்கிறேன். இது சவால்.

### முக்கியத்துவம் தரவில்லை என்பது எந்தவகையில் பொருந்தும்?

தமிழ்நாட்டை குஜராத்தோடு ஒப்பிட்டு கூறி உள்ளார்கள் இது அபத்தமானது . குஜராத் ஒரு நலத்திட்டங்கள் வழங்கும் மாநிலம் அல்ல. ஆனால் நாம் விடியல் பயணம், காலை உணவு, மகளிர் உரிமை தொகை, புதுமை பெண், தமிழ் புதல்வன் உள்ளிட்ட எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வந்துள்ளோம். ஆகவே அவர்களோடு நம்மை ஒப்பிடுவது தவறு. அதே போல Capital Expenditure எதுவும் சரியாக செய்யவில்லை என கூறி இருந்தீர்கள். உங்களின் தேர்தல் அறிக்கையில் மகளிருக்கு மாதம் 2500 ரூபாய், 6 சிலிண்டர்கள் இலவசம், 200 யுனிட் இலவச மின்சாரம், விவசாயக் கடன் தள்ளுபடி, திருமண உதவி திட்டம், பிறக்கும் குழ்நதைகளுக்கு தங்க மோதிரம் இப்படி நீங்கள் பல வாக்குறுதிகளை கொடுத்துள்ளீர்களே, அவை எல்லாம் Capital Expenditure இல் வருகிறதா.? Capital Expenditure பற்றி எதுவுமே உங்களின் வாக்குறுதியில் இல்லையே ஏன்? தற்போது விளம்பரப்படுத்தி தொடங்கி உள்ளீர்களே சிங்க பெண் திட்டம் Capital Expenditure இல் வருகிறதா.? எங்களின் ஆட்சியில் அறிவிக்கப்பட்ட Capital Expenditure திட்டங்களான ECR high way, பரந்தூர் ஏர்போர்ட் உள்ளிட்ட திட்டங்களை நிறுத்தி விட்டீர்கள். அனைத்து Capital Expenditure பணிகளையும் நிறுத்தி வைத்து விட்டு எங்களை மூலதன செலவுக்கு முக்கியத்துவம் தரவில்லை என சொல்வது எந்த வகையில் பொருத்தம்.

அதேபோல வருமான பற்றாக்குறையானது அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அதிகமாக இருந்து தி.மு.க. ஆட்சியில் குறைக்கப்பட்டது. 2020 - 2021 ஆம் ஆண்டில் ரூ.62,325 கோடியாக இருந்தது 2024-25 கழக ஆட்சியில் ரூ.45000 கோடியாக குறைக்கப்பட்டது.

### பா.ஜ.க. அரசு பற்றி வாய்திறக்காதது ஏன்? பயமா?

மொத்த GSDP யில் 3.48 ஆக இருந்த வருவாய் பற்றாக்குறை 1.47 ஆக குறைக்கப்பட்டது. கடந்த ஆண்டு ரூ.78,000 கோடி வரக் காரணம் என்ன என மட்டும் கூறாதது ஏன்? அதற்கு காரணமான ஒன்றிய பா.ஜ.க. அரசு பற்றி வாய் திறக்காதது ஏன்? GST மறுசீரமைப்பின் காரணமாக நமக்கு ரூ.11,809 கோடி இழப்பு, TANGEDCO இழப்பீட்டு நிதி ரூ.16,507 கோடி, SSA கல்வி நிதி ரூ.3548 கோடி, ஜல் ஜீவன் குடிநீர் நிதி ரூ.3,112 கோடி, நிதி ஆணையத்தின் மானியம் ரூ.2,246 கோடி, GRF ரூ.3087 கோடி, ஒன்றிய அரசின் வரி பகிர்வு ரூ.1200 கோடி ஆக மொத்தம் ரூ.41,411 கோடி ரூபாய் கடந்த ஆண்டு நமக்கு ஒன்றிய அரசால் ஏற்பட்ட இழப்பு. இதை ஏன் இந்த அரசு மக்களிடம் கூறவில்லை அவ்வளவு பயமா?. இந்த வருவாய் பற்றாக்குறைக்கு காரணமான ஒன்றிய அரசின் செயலை மறைத்து விட்டு ஏதோ கடந்த ஆட்சியின் நிதி மேலாண்மையில் ஏற்பட்ட தவறு போல சித்தரிக்க முயல்கின்றனர்.

அதே போல State own tax revenue மாநில வரி வருவாய் ஆதாரம் பற்றி குறிப்பிடுகையில் குறைந்துள்ளது என கூறினார்கள். ஆனால் அது அ.தி.மு.க. ஆட்சியிலேயே குறைந்து இருந்தது. 2011 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின் முடிவில் 7.9% ஆக இருந்தது. 2021 அ.தி.மு.க. ஆட்சியின் முடிவில் அது 5.46% ஆக குறைந்தது. தி.மு.க. ஆட்சியில் 6.33 % ஆக அதிகரித்தது தற்போது 5.47 % ஆக குறைந்ததற்கு காரணம் ஒன்றிய அரசு GST வரி விகிதத்தில் மாற்றம் கொண்டு வந்தது. இதன் பாதிப்பு கர்நாடகா , குஜராத் உள்ளிட்ட மாநிலங்ளிலும் எதிரொலித்துள்ளது. அதனால் அவர்கள் சொல்வது போல எங்களால் அது குறையவில்லை.

### கடன் அளவில் சுருக்கிப் பார்க்க முடியாது!

அரசு போக்குவரத்து துறையின் கடன் , TANGEDCO கடன் என்பது இலவச பஸ் பாஸ், இலவச மின்சாரம் உள்ளிட்ட மக்களுக்கான நலத்திட்டங்கள் செய்லபடுத்தப் படுவதாலும், இந்த துறைகள் மக்களுக்கான சேவைத் துறைகள் என்பதாலும் கடன் என்ற அளவில் மட்டும் இதை சுருக்கி பார்க்க முடியாது. அப்படி கடன் இல்லாமல் இத்துறையை மாற்றுகிறோம் என்றால் இலவச பஸ்பாஸ், மகளிர் இலவச பயணம், விவசாயிகள் இலவச மின்சாரம் இவற்றை எல்லாம் நிறுத்திப்பாருங்கள். நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள் என மக்கள் பார்க்க தான் போகிறார்கள்.

ஒரு ஆட்சியில் கடன் என்பது முக்கியம் கிடையாது, அதை எப்படி மக்கள் நலனுக்காக செலவு செய்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்.

GSDP வரம்பிற்குள் கடன் அளவை எவ்வாறு வைத்துள்ளீர்கள் என்பது தான் முக்கியம். ஆனால் இவற்றை எல்லாம் காரணம் காட்டி தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற மாட்டோம் என இப்போதே கைவிரித்திருப்பது மக்களை ஏமாற்றும் செயல். அதற்காக தான் இந்த வெள்ளை அறிக்கை என்ற வெற்று அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியில் கூறியுள்ளார்.